முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 533/2018

தேதி : 26-02-2025

(வா.சா.1) – திருமதி.ராஜேஸ்வரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 6 முதல் 10 –ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

6 முதல் 10 –ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. இந்த வழக்கில் நான் தான் வாதி என்றால் சரிதான். வழக்கு சொத்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் 15.09.1984ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது. வழக்கு சொத்து தொடர்பாக பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 79/2004ல் 22.11.2006ல் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை. மேற்படி தீர்ப்பின்படி 1ம் பிரதிவாதிக்கு 6ம் பிரதிவாதியால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, ஆனால் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றப்பட்டது. பட்டா ரத்து செய்யக்கோரி வருவாய்துறையினரிடம் ஏதேனும் மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன்.

2. 6 முதல் 10 பிரதிவாதிக்கு எதிராக எந்தவொரு பரிகாரமும் கோரவில்லை என்றும், எனவே அவர்கள் இந்த தரப்பினராக சேர்க்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பி உள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 6 முதல் 10 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு அவசியமற்றவர்கள் என்பதால் அதிகப்பட்ச செலவுத்தொகையுடன் வழக்கு அவர்களை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் தீர்ப்பாணையை மறைத்து உண்மைக்கு மாறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.